Koviloor Digital Library

4-6



5283
R65

Atharva Veda Moorthi

YOUR FAMILY FRIEND

Editor G.K.Seetharaman, M.A., Astrologer April - 2003

RNI Regd. No. 50636/89, Delhi Postal Regd. No. DI -16028/2003 & " U " No. (SE) 52/2003

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-6

YOUR FAMILY FRIEND

FAMILY- 14, FRIEND -4, April - 2003.
32 PAGES
RNI Regd. No.50636/89, Delhi Postal Regd. No. DL-16028/2003-2005
& " U " No. (UE) 52 / 2003-2005

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 5283
R65

Koviloor Digital Library

மானிட இன்பம்

மனிதன் சுகத்தை அனுபவிக்காமல் இல்லை. ஆனால் பல மடங்கு துக்கத்தையும் கலந்து அனுபவிக்கிறான். நீராவியினாலும், ஆகாய விமானத்தாலும், மின்சார சக்தியாலும், அணுசக்தியாலும் எண்ணிறந்த நன்மைகளைச் செய்துகொள்கிறான். ஆனால் அவைகளினாலேயே ஒரு தேசத்தையே சில நிமிஷங்களில் பஸ்பமாக்கி துன்பத்தைத் தேடிக்கொள்கிறான். சாவும், நோவும் அவனை விடுகிறதில்லை. பல துன்பங்களுக்கிடையே கிடைக்கும். அல்ப சுகத்தையே பெரிதும் போற்றி மயங்குகிறான்.

ஒரு காட்டின் வழியாக ஒரு மனிதன் சென்றுகொண்டிருந்தான். அக்காட்டில் முள்ளும், கல்லும், பாம்பும் புலியும் இருந்தன. அவைகளைக் கண்டு பயந்து அவன் ஓட்டம் பிடித்தான். ஆனால் காட்டின் எல்லையில் ஒரு வலை கட்டப்பட்டிருந்தது. அதன் பக்கத்தில் ஒரு ராக்ஷஸியானவள் அம் மனிதனை விழுங்கக் கையை நீட்டினாள். மனிதன் கதிகலங்கி அங்குமிங்கும் ஓடும்போது ஒரு ஆழமான கிணற்றில் விழுந்தான். ஆனால் கிணற்றின் சுவற்றில் முளைத்திருந்த சில செடிகளைப் பிடித்துக்கொண்டு தொங்கினான்.

கீழே கிணற்றுக்குள் ஒரு பெரிய ஸர்ப்பம் இருந்தது. மனிதன் பிடித்துக் கொண்டிருந்த செடிகளின் வேர்களை கருப்பும் வெளிப்புமான ஒரு எலி கடித்துக் கடித்து அறுத்துக் கொண்டிருந்தது. கிணற்றின் சுவற்றிலிருந்த தேன்கூட்டிலிருந்து அநேக தேனீக்கள் வெளியே பறந்து மனிதனைக் கொட்டிக்கொண்டிருந்தன. தற்செயலாய் அந்த மனிதன் நிமிர்ந்து பார்த்தபோது, தேன் கூட்டிலிருந்து ஒரு சொட்டுத் தேன் அவன் வாயில் விழுந்தது. இப்பேர்ப்பட்ட நிலையிலும் 'ஆஹா! என்ன ருசி! என்ன ஆனந்தம்! இன்னும் ஒரு சொட்டுத் தேன் விழாதா?' என்று சொல்லிக் கொண்டே அம்மனிதன் வாயைத் திறந்து கொண்டிருந்தான் என்பதாக மஹாபாரதத்திலிருந்து ஒரு உதாரணம் சொல்வதுண்டு. அதாவது 'காடு' என்பது இந்த உலகம். வலையில் கட்டப்பட்டிருந்த

Koviloor Digital Library

பிரதேசம் மனிதனுடைய ஆயுட் காலம். காட்டிலிருந்த முள்ளும், கல்லும் துஷ்ட மிருகங்களும் மனிதனைத் துன்புறுத்தும் வியாதிகள். ராக்ஷஸி என்பவள் மனிதனைத் தாக்கும் மூப்பும், தளர்வும், கிணறுமனிதனுடைய சரீரம். கிணற்றிலிருந்த ஸர்ப்பம் சாவு. மனிதன் பிடித்துக்கொண்டிருந்த செடிகள் அவனுடைய சரீரத்தின் பேரிலுள்ள அபிமானம். செடிகளைக் கடித்த எலியானது பகலும், இரவும் சேர்ந்த ஒருநாள். தேனீக்கள் மனிதனுக்கு ஏற்படும் தொல்லைகள். அவன் வாயில் விழுந்த தேன் சொட்டுக்களே அவனுக்கு இவ்வளவு துன்பங்களுக்கிடையே கிடைத்த அற்ப சுகங்கள். இந்த சுகங்களையே மனிதன் பெரிதும் விரும்புகிறான். நித்யமான ஆனந்தம் எது என்பதை அவன் அறிந்துகொள்ள முயற்சி செய்வதும் இல்லை. அவனுடைய வாழ்நாட்கள் வியர்த்தமாகிக் கொண்டு வருவதையும் அவன் கவனிப்பதில்லை.

பெரியோர்கள் காட்டிய வழிகளைப் பின்பற்றிப் பேரின்பம் பெற முயலுவோமாக.

அன்புடன் ஜி.கே. ஸீதாராமன்

ஸுபானு வருஷ தர்பண தினங்களுக்கான திதி நக்ஷத்ர விவரங்கள்

வருஷ பிறப்பு			
14.04.2003	திங்கள்	ஶுக்ல த்வா	பூரம்
சித்திரை அமாவாசை			
01.05.2003	வியாழன்	அமாவாஸை	அஶ்வினி
வைகாசி அமா			
30.05.2003	வெள்ளி	சதுர்தஶி	க்ருத்திகை
ஆனி அமா			
29.06.2003	ஞாயிறு	அமாவாஸை	ம்ருகசீர்ஷம்
தக்ஷிணாயணம் (ஆனி கடைசி)			
16.07.2003	புதன்	க்ருஷ்ணத்ரீதியை	அவிட்டம்
ஆடி அமா			
28.07.2003	திங்கள்	சதுர்தஶி	புனர்பூசம்
ஆவணி அமா			
27.08.2003	புதன்	அமாவாஸை	மகம்
புரட்டாசி அமா			
25.09.2003	வியாழன்	சதுர்தஶி	பூரம்

Koviloor Digital Library

ஸம்ஸ்காரங்கள்

முதலில் த்விஜன்மாவை ரக்ஷிப்போம்

பிறப்பினால் ப்ராம்மணன், ஸம்ஸ்காரங்களால் த்விஜன் எனப்படுகிருன். விப்ர என்பது வித்யையால் உண்டாகிறது. இம்மூன்றும் சேர்ந்தால் ச்ரோத்ரியன் எனப்படுகிருன். ப்ராம்மண, க்ஷத்ரிய, வைச்ய என்பவர் 'த்விஜர்' எனப்படுவர். இருமுறை பிறப்பவர் என்பது அதன் பொருள். இருமுறை பிறப்பவை பக்ஷியும் பல்லுமாம். இவைகளுக்கும் 'த்விஜ' என்ற பெயருண்டு. பக்ஷி தாய் வயிற்றிலிருந்து முதலில் முட்டையாகப் பிறக்கிறது. பின்னர் குஞ்சாகிறது. பற்களும் ஒருமுறை முளைத்து விழுந்து, இரண்டாம் முறை பிறக்கின்றன. அப்படியே மூன்று வர்ணத்தாரும் தாய் தந்தையிடம் உண்டாகும்போது ஒரு பிறப்பையும், கர்ப்பாதானம் முதலிய ஸம்ஸ்காரங்களால் மற்ருேர் பிறவியையும் பெறுகின்றனர். ஆதலால் 'த்விஜர்' எனப்படுகின்றனர். வேத சாஸ்த்ர அப்யாஸத்தால் 'விப்ரன்' ஆகின்ருன். இம்மூன்றும் ஒன்று சேர்ந்தால் 'ச்ரோத்ரியன்'. இந்த ச்ரோத்ரியனே உயர்ந்தவன். அவன் ஆசையற்றவனுனல் மிகமிகச் சிறந்தவன். தைத்திரீய உபநிஷத் கூறும் ஆனந்த ஸோபனத்தில் இவனே முதற்படி. வைச்வதேவத்தில் "அகாமோபஹதாய ச்ரோத்ரியாய ஸ்வாஹா" என அவனுக்கு ஒரு ஹோமம் செய்யப்படுகிறது.

எல்லா ஸம்ஸ்காரங்களும் க்ரமமாக செய்யப்பட்டின் ப்ரும்மலோகம் கிட்டும். இவைகள் உடல் மூலமாக உள்ளக் கமலத்திலுள்ள ஜீவனை அடைகின்றன. அந்த ஜீவனே பரமாத்மாவிடமிருந்து மாயையால் பிரிக்கப்பட்டவன். அவித்யையால், ஜனன மரணம், ஜதை, சோகமோஹம், பிணி பசி என்பன அவனுக்கு உண்டாகின்றன.அவித்யை என்ற மலம் அகன்ருல் ஞானம் உண்டாகும். ஞானத்தால் பேரின்பம் பெறலாம். நீண்ட நாளாக களிம்பு நிறைந்த ஒரு பாத்ரத்தைப் பல நாள் சுத்தம் செய்யவேண்டும். அப்பொழுதுதான் களிம்பு அகன்று இயற்கை

Koviloor Digital Library

நிறம் உண்டாகும். குடிக்கவும், மற்ற கார்யங்களுக்கும் அப்பொழுதுதான் பயன்படும். உள்ள தோஷத்தை அகற்றுவதே 'ஸம்ஸ்காரம்' எனப்படுகிறது.

அவையாவன: கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மா, நாமகரணம், அன்னப்ராசனம், சௌளம், உபநயனம், நான்கு வேத வ்ரதங்கள், ஸமாவர்த்தனம், கல்யாணம், பஞ்ச மஹா யக்ஞம், ஏழு ஸோம ஸம்ஸ்தை என்பன. ப்ராஜாபத்ய, ஸௌம்ய, ஆக்னேய, வைச்வதேவ என்பன. ப்ராஜாபத்ய, ஸௌம்ய, ஆக்னேய, வைச்வதேவ என்பன நான்கு வ்ரதங்கள். பஞ்ச மஹா யக்ஞமாவது: தேவயக்ஞம், பித்ரு யக்ஞம், மனுஷ்ய யக்ஞம், பூத யக்ஞம், ப்ரும்மயக்ஞம் எனப்படும். அஷ்டகா–அன்வஷ்டகா, பார்வணம், ஸ்தாலீபாகம், ஆக்ரஹாயணீ, ச்ராவணீ, சைத்ரீ, ஆச்வயுஜீ என்பவை ஏழு பாக யக்ஞங்கள், அக்னி ஆதானம், அக்னி ஹோத்ரம், தர்சபூர்ண மாஸம், ஆக்ரயணம், சாதுர்மாஸ்யம், நிரூட பசுபந்தம், ஸௌத்ராமணி என்ற ஏழும் ஹவிர்யக்ஞங்கள். அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்த்யம், ஷோடசீ, வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம் என்ற ஏழும் ஸோம ஸம்ஸ்த்தை எனப்படும்.

மேற்கூறியவைகளில் கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மா, நாமகரணம், அன்னப்ராசனம், சௌளம், உபநயனம், வ்ரதம், ஸமாவர்த்தனம், விவாஹம் இவைகள் பெயரளவில்தான் நடக்கின்றன. அவச்யம் ப்ரதிதினம் செய்ய வேண்டிய ஔபாஸனம், வைச்வதேவம் முதலியவைகளையே பலர் செய்வதில்லை. ஸர்ப்பபலி, சைத்ரீ, ஆக்ரயணீ முதலிய ப்ரதி வருஷம் செய்யத்தக்கவைகளைச் செய்பவர் அரிது. அக்னி ஆதானம் முதலிய ச்ரௌத கர்மா எனப்படும் மூன்று அக்னிகளில் செய்யத்தக்க மற்ற ஸம்ஸ்காரங்களைச் செய்பவர் கோடியில் ஒருவர். இந்த ஸம்ஸ்காரங்களை அலக்ஷ்யம் செய்ததால் ஆத்ம சக்தியை இழந்தோம். பலவகை துன்பத்தையும் பெறுகிறோம். இவைகளின் பெருமையையும் அவச்யத்தையும் முறையே கூறுவோம். அன்பர்கள் படிப்பதோடு மட்டும் நிற்காமல், காலத்தில் அந்தந்த ஸம்ஸ்காரங்களைச் செய்யவேண்டும். பொருள் உணர்ந்து செய்யவேண்டும். ச்ரத்தையுடன் செய்யவேண்டும். மந்த்ர,

Koviloor Digital Library

தந்த்ர லோபமின்றி செய்யவேண்டும். இக்கர்மாக்களை வேதம் விதித்தது. தர்ம நூல் விளக்கிற்று. கல்ப ஸூத்ரங்கள் விவரித்தன.

முதல் ஸம்ஸ்காரம் கர்ப்பாதானம்

ஒரு மரம் நல்ல பழம் அளிக்கவேண்டுமானால், நல்ல விதையை நல்ல நிலத்தில் நல்ல காலத்தில் விதைக்க வேண்டும். 'பருவத்தே பயிர்செய்' என்பர். ஸாதாரண செடி கொடிகளுக்கே இந்த நியமம் வேண்டுமானுல் ஆறறிவு படைத்த மனிதனைப் பிறப்பிக்க எவ்வளவு நியமம் வேண்டும்? நற்புத்ரன் உண்டாகி, அவனும் அவன் பெற்றோரும் நன்மை பெற சில விதிகளைக் கூறுகிறது சாஸ்த்ரம். முதல் ஸம்ஸ்காரம் ஒழுங்காக இருந்தால் தான் மற்றவை நன்கு நடைபெறும். 'கர்ப்பாதானம்' எனும் கர்மாவின் பொருளை அடுத்தபடி கூறுவோம். தர்மநூல், கூறுவதுபோல் நடக்கவும் அதன் பெருமையை அறியவும் தர்ம விதியை முதன் முதலில் கவனிப்போம்.

ஸ்த்ரீகள் ருதுவான தினம் முதல் 16 நாட்களுக்குள் தான் கர்ப்பம் தரிப்பார்கள். 2,4,6, போன்ற இரட்டைப் பட்ட தினங்களானுல் ஆண்சிசுவும், 1,3,5, போன்ற ஒற்றைப் பட்ட நாட்களானுல் பெண் குழந்தையும் உண்டாகும். இந்த 16 நாட்களிலும், முதல் 4 தினங்களிலும், அமாவாஸ்யை, பௌர்ணமி, அஷ்டமி, சதுர்தசி, ஏகாதசி, ஸங்க்ரமணம், ஜன்ம நக்ஷத்ரம் ஆகிய நாட்களிலும் ஸ்திரீ புருஷ ஸங்கமம் கூடாது. ரஜஸ் வலையான முதல் நாள் சாண்டாளி. இரண்டாம் நாள் ப்ரும்மஹத்தி செய்தவள். மூன்றும் நாள் வண்ணுத்தி எனப்படுவார்கள். நான்காவது நாள் ரஜஸ் ஸம்பந்தம் இருக்குமாதலின், ஸத் புத்ரனை விரும்புவோர் இந்த 4 தினங்களையும் விலக்கவேண்டும். 4-வது தினத்தில் உண்டாகும் சிசு அல்பாயுஸ் ஆகும். 5-ல் புத்ரீ, 6-ல் மத்யமமான புத்ரன். 7-ல் புத்ரினில்லாப் பெண். 8-ல் அடக்கி ஆளும் புத்ரன். 9-ல் நல்ல புத்ரீ. 10-ல் நற்புத்ரன். 11-ல் அதர்மம் செய்யும் பெண். 12-ல் சிறந்த புத்ரன். 13-ல் வ்யபிசாரியான பெண். 14-ல் தர்மக்ஞனும் ஆத்மக்ஞானியுமான புத்ரன். 15-ல் நல்ல இடத்தில் வாழக்கைப்படும் பெண். 16-ல் ஸகல நற்குணங்களுமுள்ள புத்ரன். இப்படி முறையே

Koviloor Digital Library

ஜனிப்பார்கள். புருஷனின் வீர்யம் அதிகமானுல் ஆணும், ஸ்திரீயின் சக்தி அதிகமானுல் பெண்ணும், இரண்டும் ஸமமாயின் நபும் ஸகமும் பிறக்கும். ஆதலின் "உண்டி சுருங்குவது பெண்டிற் கழகு." என்பர்.

ருது காலத்தில் ஒரு முறை அவச்யம் கர்ப்பாதானம் செய்யவேண்டும். இல்லேயேல் சிசுவைக் கொன்ற பாபம் உண்டாகும். பித்ருக்களின் கடனே நீக்குவதற்கு ஒரு புதல்வன் அவச்யம் வேண்டும். அது வரை ருது ஸங்கமம் அவஸ்யம். புத்ரன் ஜனித்த பின் நிர்பந்தமில்லே. பூர்ண கர்பிணி, இஷ்டமில்லாதவள், ரோகமுள்ளவள், விரித்த கேசமுள்ளவள், பசியுள்ளவள், அதிகமாக உண்டவள், ஆகிய ஸ்த்ரீகளிடம் கர்ப்பாதானம் செய்யலாகாது. சுத்தனுய், சந்தனம், புஷ்பங்களால் தன்னேயும் மனேவியையும் அலங்கரித்து, தீபத்தை அருகில் வைத்துக்கொண்டு, முதல் ஸங்கமமானுல் பூணூலே யக்ஞோபவீதமாக அவதரித்து, நல்ல சிந்தையுடன் ஸங்கமம் செய்யவேண்டும். ஒரே ஸமயத்தில் இருவரும் வஸ்த்ரமில்லாதிருந்தால் தோஷமுண்டாகும். முதல் முறை தவிர மற்ற காலத்தில் பூணூலேப் பின்புறம் மாலே போல் தொங்க விட வேண்டும். முதல் ஸங்கமத்தில் அவச்யம் உடனே ஸ்னனம் செய்யவேண்டும். மற்றவைகளில் நன்கு சுத்தம் செய்து கொண்டு, ஆசமனம் செய்து விட்டுத் தனிப் படுக்கையில் படுக்க வேண்டும்.

ஸ்த்ரீகள், ப்ரஸவம்வரை புருஷ ஸங்கமம் வேண்டுமென இந்த்ரனிடம் வரம் கேட்டிருப்பதால், அவர்கள் கோரினுல், ருது காலமில்லாதபோதும், அதாவது 16நாட்கள் சென்ற பின்பும் ஸங்கமம் செய்வது பாபமல்ல. பகலும் இரு ஸந்த்யா காலங்களும் சேரத்தக்க காலமல்ல. அச்சமயம் கர்ப்பமுண்டானுல் முறையே அல்பாயுஸாகவும், அஸுரகுணமுள்ளதாகவும் சிசுதோன்றும். போக காலத்தில் இருவரும் கண்களே மூடலாகாது. கோபம் துக்கம் முதலியவைகளே விட்டு ஸந்தோஷத்துடன் இருக்க வேண்டும். இந்த விதிகளே அனுஸரித்தவர் க்ருஹஸ்தராயினும் ப்ரும்மசர்யத்தைக் கைக்கொண்டவராவர். அமாவாஸ்யை, பௌர்ணமிகளில் ஸ்த்ரீ ஸங்கமம் செய்தோர் இந்த்ரியத்தை இழப்பர் என வேதம் கூறுகிறது. சாஸ்த்ர விதியை மீறி அதி ஸங்கமம் செய்வோரின் தாது குறையும்.

Koviloor Digital Library

ரோகமுண்டாகும். செல்வமழியும், ஸத்கர்மாவும் கெடும்.

இது ஒரு ரஹஸ்ய விஷயம். இதற்குக் கூட சாஸ்த்ரம் கூறுவது அழகோ? என நினைப்பர் சிலர். முக்யமாக கவனிக்க வேண்டிய விஷயம் இதுதான். இதில் தவறு செய்தால், அது நமக்கும், பிறக்கப்போகும் சிசுவிற்கும் தீமை செய்ததாகும். ஈ, எரும்பு முதல் ப்ரும்மா வரை அனைவருக்கும் போக இச்சை இயற்கை. இதில் சாஸ்த்ரம் புகுந்து, போகத்திற்கும், குறைவின்றி, அதைக் கட்டுப்படுத்தி முடிவில் மோக்ஷத்திற்கும் வழி காட்டுகிறது. சாஸ்த்ரம் இதைக் கேவல போகமாகக் கருதவில்லை. “மாதா பூர்வருபம், பிதா உத்தரருபம், ப்ரஜை ஸந்தி: ப்ரஜனனம் ஸந்தானம்” என்றும் “அரணியைக் கடைந்து அக்னி எடுப்பது போலாம் இது” என்றும் வேதம் கூறுகிறது. பேரின்பத்திற்குச் சிற்றின்பம் வழி காட்டியாம். ச்ருங்காரம் கூருத கவியில்லை. புராணமில்லை. வாத்ஸ்யாயனர் தனியே ஒரு நூல் எழுதினர். கோபிகைகள் கண்ணனிடம் காட்டியது ப்ரேம பக்தி. குறித்த நல்ல நாளில் ருது கமனம் செய்தால், அங்கபங்கமின்றி, நல்லறிவு, நற்செயல், நல்லெண்ணமுள்ள குழந்தை பிறக்கும். த்ருதராஷ்ட்ரனின் தாய், ஸங்கம காலத்தில் கண்களை மூடிக்கொண்டிருந்ததால் அவன் குருடனுகப் பிறந்தான். திதி என்பவள் ஸந்த்யாகால ஸங்கமத்தால் அஸுரரைப் பெற்ருள்.

ஒரு அரசனுக்குக் கர்ப்பாதானம் செய்ய நாள் இது ஸரியல்ல, அது ஸரியல்ல என்ருர் புரோஹிதர். ஆனுல் அவரோ அந்த விதியை மீறி ஸங்கமம் செய்தார். அவரை அழைத்து அரசன், “எனக்கு மாத்ரம் நல்ல நாள் கிடைக்கவில்லையோ” என்ருன். புரோஹிதர் கூன், குருடு, செவிடு, ஒற்றைக்கண், திக்குவாய், குருபீ முதலிய தனது புத்ரர்களை அழைத்து அரசன் அருகே நிறுத்தி, “வேந்தே, விதியைத் தழுவாததின் பயன் இவை. இத்தகைய புத்ரர் வேண்டின் நாள் பார்க்க வேண்டாம்” என்ருர். நல்ல படம் பிடிக்க எவ்வளவு நியமம்? நடுப்பகலோ, நடுநிசியோ, அதிக வெளிச்சமோ இருட்டோ கூடாது. அசைந்தாலோ, படம் கெட்டு விடும். சிறித்த முகத்துடன் இருக்க வேண்டும். “தானே புத்ரனுக மனைவியிடம் பிறக்கிருன். தந்தையின் ஒவ்வொரு அவயவமும் புத்ரன் அவயவமாகிறது” என வேதம்

Koviloor Digital Library

A. No. 5283 R65 நூலகம், கோவிலூர்

கூறுகிறது.

ஆதலின் சாஸ்த்ரவிதியைப் பூர்ணமாகக் கவனித்து நற் புத்ரனைப் பெற வேண்டும். கர்ப்ப வ்ருத்தியைப் பற்றி கர்ப்ப உபனிஷத் முதலியன மிக ரஸமாக விளக்குகின்றன.

கர்ப்பாதான ப்ரயோகம்

கர்த்தா காலை ஸ்னானம் செய்து, ஸந்த்யா ஜபம் ஆனபின் ஔபாஸனம் செய்ய வேண்டும். அதன் பிறகு பவித்ர மணிந்து, ப்ராம்மணர்களை வணங்கி, தக்ஷிணையும் தாம்பூலம் கரத்திலேந்தி, 'அசேஷே' என்ற மந்த்ரம் கூறவேண்டும். வேதியருக்கு தன்னாலியன்ற தக்ஷிணை அளித்து, ஆரம்பிக்கும் கர்மாவைச் செய்ய நமக்கு யோக்யதை உண்டாகும்படி அருள்புரிய அவர்களை வேண்டுகிறோம். அவர்கள் 'ததாஸ்து' அப்படியே யோக்யதை உண்டாகட்டும் என அனுக்ஞை தருவர். இதற்கு 'அனுக்ஞை' எனப்பெயர். எந்தக் கர்மாவை ஆரம்பத்தாலும் இதை முதலில் செய்யவேண்டும். வேதமறிந்த ப்ராம்மணர்களிடம் ஸர்வ தேவதைகளும் வஸிப்பதால், அவர்களுக்குத் தக்ஷிணை கொடுத்து அவர்கள் மூலம் அனுக்ஞை பெறவேண்டும்–அனுக்ஞை பெறுவதற்காக அளிக்கும் தக்ஷிணைக்கே 'அனுக்ஞை' எனப் பெயரிட்டு, 'எனக்கு அனுக்ஞை தரவில்லை' என்று கூறுவதும் தவறு. கர்த்தா அனுக்ஞை பெறுகிறானே தவிற, தருகிறானில்லை.

'சுக்லாம்பரதரம்' குட்டிக்கொண்டு ப்ராணாயாமம் செய்து ஸங்கல்பம் செய்கிறோம். ஆரம்பிக்கும் கர்மா விக்னமின்றி நடப்பதற்காக முதலில், (மஞ்சளால் செய்த) விநாயகரைப் பூஜிக்கிறோம். த்யானம் முதலிய 16 உபசாரங்களைச் சுருக்கமாகச் செய்து, அவர் முன்னிலையில் கர்ம ஸங்கல்பம் செய்து, விக்னேச்வரரை அனுப்பி விட்டு அந்த ப்ரஸாதத்தை தம்பதிகள் தரிப்பர். தேச காலங்களைக் கூறி, நக்ஷத்ரத்தில் ராசியில் பிறந்த இன்ன பெயருள்ள என் மனைவிக்கு ருதுகாலத்தில் உண்டான தோஷம் அகல, போதாயனர் சொற்படி ருது சாந்தி ஜப கர்மா செய்கிறேன் என்பது ஸங்கல்பத்தின் பொருள். தான்யம், அரிசி, எள் இவைகளை ஒன்றை பூமியில் பரப்பி, அதன் மீது தர்ப்பத்தால்

தாமரைப்பூ போல் எழுதி, அதன் மேல் கலசத்தை வைக்க வேண்டும். கலசத்தில் நூல் சுற்றி, உள்ளே வாஸனை தூபம் ஏற்றி, தர்ப்பத்தலாகிய கூர்சத்தை வைத்து வ்யாஹ்ருதியைச் சொல்லி ஜலத்தை விட வேண்டும். அதன் மீது மாவிலை, தேங்காய், வருண ப்ரதிமை, கூர்ச்சம் இவைகளை வைக்க வேண்டும். கூர்ச்சம் கர்மாவைக் கெடுக்கும் ராக்ஷஸர்களை அழிக்கும். மாவிலை முதலிய துளிர்கள் ஸர்வ தோஷங்களையும் அகற்றும். சிவனிடமிருந்து உண்டான முக்கண் உள்ள தேங்காய் பாபத்தையும் பீடையையும் அகற்றும். இப்பொருள் கொண்ட மந்த்ரங்களைக் கூறி அவைகளை வைக்க வேண்டும். இதுவரை கூறப்பட்டவை உதக சாந்தி, ஷஷ்டி பூர்த்தி சாந்தி முதலிய கலசமுள்ள ஸகல கர்மாக்களுக்கும் பொதுவாம்.

கலசத்தில் வருணனை ஆவாஹனம் செய்து, அதன் மீது விஷ்ணுப்ரதிமையை வைத்து, அதில் அவரை ஆவாஹனம் செய்ய வேண்டும். "ருது சாந்தி ஜப கர்மாவில் தங்களை ரித்விக்காக — எனக்காக வேலை செய்பவராக வரிக்கிறேன்" என ப்ராம்மணர்களை வரிக்க வேண்டும். அவர்கள் கலசத்தின் அருகில் அமர்ந்து 108 முறை விஷ்ணு காயத்ரி, வேதத்திலிருந்து, ஆபோஹிஷ்டா, ஹிரண்யவர்ணா, பவமான, வருண, விஷ்ணு, ருத்ர, ப்ரும்ம, துர்க்கா, ஸ்ரீ, புருஷ முதலிய ஸூக்தங்களையும் பஞ்ச சாந்தி, ரிசாம்ப்ராசீ என்ற மஹாமந்த்ரங்களையும் ஜபிப்பார்கள். சுருக்கமாக இவைகளின் பொருள்:— அந்தந்த தேவதைகளும் பாபத்தை அகற்றி, சுத்தமாக்கி, ஸகல பீடைகளையும் நீக்கி, இன்பம் அளிக்கட்டும் என்பதேயாம். 'நமோ ப்ரும்மணே' என்பதை மூன்று முறை ஜபித்து நிவேதனம் செய்யவேண்டும். வருணனையும் விஷ்ணுவையும் உத்வாஸனம் செய்து (அனுப்பிவிட்டு) மந்த்ர தீர்த்தத்தினால் தம்பதிகளை ப்ரோக்ஷிக்க வேண்டும். பத்னிக்கு இந்த கலச தீர்த்தத்தினால் அபிஷேகம் செய்தபின் சுத்த அக்னியில் ஹோமம் செய்ய வேண்டும்.

அன்னத்தைப் பலாச இலையில் வைத்து காயத்ரியைக் கூறி ஹோமம் செய்ய வேண்டும். "ஸவித்ரே இதம் நமம" ஸூர்யனுக்கே இது. என்னுடையதல்ல— இதை உத்தேச த்யாகம் என்பர். இங்ஙனம் ஹோமங்கள் ஆனபின் அந்தந்த தேவதையைக் குறித்து "இதம் நமம"

Koviloor Digital Library

என்ற கூற வேண்டும். விஷ்ணு ஸூக்தத்தினல் ஸமித்து, ப்ரும்ம ஸூக்தத்தினல் அன்னம், ருத்ர ஸூக்தத்தினல் ஆஜ்ய ஹோமம் செய்து, ருதுவான நக்ஷத்ர வாக்யங்களால் ஸமித்து, அன்னம், ஆஜ்யம் இவைகளே 108 முறை ஹோமம் செய்ய வேண்டும். "ஸ்விஷ்டக்ருத்" ஆன பின், உத்தராங்கமாக ஜயாதி ஹோமம் செய்து உபஸ்தானம் செய்ய வேண்டும். ஹோம ஆரம்பத்திற்கு முன் கர்மாக்களைக் கவனிக்க ப்ரும்மாவாக ஒருவரை வரித்து, உபஸ்தானத்திற்கு முன் ப்ரும்மதக்ஷிணை தரவேண்டும். பின்னர் ஆசீர்வாதம். இதுவரை காலே வேலே.

மாலே ஔபாஸநமானபின் இரவில் தம்பதிகள் க்ஷீரான்னம் (பால் சாதம்) உண்டு, பலதானம் செய்து குறித்த காலத்தில் லக்னத்தில் முதலில் விக்னேச பூஜை செய்து. கர்ப்பாதான மந்த்ர ஜபம் செய்ய வேண்டும். ருது ஸமாவேசன மந்த்ரத்தைச் சிலர் விவாஹத்திலும் கூறுவதால், ருதுவான பின் தான் விவாஹம் நடந்தது எனச் சிலர் கூறுவர். அதற்குக் காரணம் மந்த்ர அர்த்தம் ஸ்த்ரீ புருஷ ஸங்கம் பற்றி கூறுவதேயாகும். அது தவறு. ப்ரும்மசாரி ஸமிதாதான மந்த்ரத்தில் 'நல்ல குழந்தை பிறக்கவேண்டும்' என மந்த்ரம் கூறுகிருன். அந்த மந்த்ரார்த்தத்தைக் கொண்டு சாந்தி முஹூர்த்தம் ஆனபின் உபநயனம் எனக் கூறுவது போலாகிறது.

கர்ப்பாதான ஸமாவேசந மந்த்ர அர்த்தம்

"நாம் பலவாலிகளாயிருந்து வெகுகாலம் நீடித்திருக்கும் ரேதஸ் உள்ளவர்களான ப்ரஜைகளே உண்டு பண்ணுவோம். அரணியிலிருந்து கடைந்த அக்னியைப் போல், ஸத்புத்ரன் உண்டாகட்டும். பரமாத்மாவின் அம்சமான நான் பித்ருக்களின் நன்மையை நாடி ஸத் புத்ரனே உண்டு பண்ணுகிறேன். நல்ல வர்ணமும், செல்வமும் உள்ள ஆண், பெண்களேப் படைப்போம். நாம் யாசகர்களுக்கு தனமளித்து மோக்ஷத்தைப் பெறுவோம். நம் உருவம் புத்ரர் பிறப்பதற்கேற்ற சக்தி உள்ளதாக இருக்கட்டும். விஷ்ணு உன்னேக் கர்ப்பாதானத்திற்கேற்றவளாகச் செய்யட்டும். ப்ரும்மா என் மூலமாக ரேதஸ்ஸை விடட்டும். 'தாதா' அதை கருவாக்கட்டும். 'த்வஷ்டா' அவயங்களேச் செய்யட்டும். ஸினீவாலியும்

Koviloor Digital Library

ஸரஸ்வதியும் வஸிக்கும் உன்னிடம் அஸ்வினீ தேவர்கள் கருவை உண்டு பண்ணட்டும். அவர்களைப்போல் அழகாக குழந்தை உண்டாகட்டும். பூமி மழையால் பயிர்களை உண்டுபண்ணுவது போல் நீ நற்குழந்தையை பெறு. பூமி அக்னியையும், த்யுலோகம் இந்த்ரனையும், கருவில் வைத்திருப்பதுபோல் நீ கருவைத்தரி. ஹே விஷ்ணோ! இவளிடம் 10வது மாதத்தில் குழந்தையை உண்டுபண்ணு. 'நேஜமேஷ' எனும் ஹே க்ரஹமே. நீ இவளை விட்டு விலகு. இங்கு நீ வர விரும்பினால் புருஷக் குழந்தையுடன் வா. ஹே, மனைவியே, நீ எனது சக்தியை ஏற்ற 10 மாதம் கர்ப்பந் தரித்து நற்குழந்தையைப் பெறு. க்ஞாதிகளுக்குள் உத்தமியாக இரு. அம்பானது பாணப் பெட்டியில் புகுவதுபோல் சிசு உன் கருவில் நுழையட்டும். சிசு, நொண்டி, செவிடு, பிசாசபீடை முதலிய தோஷமின்றி, பூர்ணமாகிப் பிறக்கட்டும். அடுத்து பல புத்ரர்களே பிறக்கட்டும். நீ தேனு போல் இரு. ஹே வாயோ! இந்த கர்மாவை ஸித்தி உள்ளதாகச் செய்."

இப்படிப்பட்ட பொருள் கொண்ட மந்த்ரங்களைக் கூறி, விதிப்படி நிஷேகம் நடத்தவேண்டும். மறுநாள் காலையில் நித்யகர்மாக்கள் ஆனபின் நாந்தீ ச்ராத்தம் செய்து கர்ப்பாதானம் எனும் ஸம்ஸ்காரத்தை முடிக்க வேண்டும்.

Visu win Arattai Arangam

விசு வின் அரட்டை அரங்கம்

on 4th may 2003 (1.00 p.m.)

at

Siri Fort Auditorium, New Delhi

for Details Contact : **Your Family Friend**

142, Zamrudpur, New Delhi-48.

Ph.:-26219385, 26428796,

9868109691, 9810599677

Koviloor Digital Library

அன்னை தந்தை குரு-தெய்வம்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்

நாம் எதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றாலும் பெரியவர்கள் மூலந்தான் தெரிந்து கொள்கிறோம். குழந்தை தன் தாயார் தகப்பனார் யார் என்பதை, தாயாரிடத்திலிருந்தோ, தகப்பனாரிடத்திலிருந்தோ அல்லது பெரியவர்கள் மூலமாகவோதான் தெரிந்துகொள்ள முடியும். மாதா, பிதா குரு ஆகிய இந்த மூன்று பேர்களும் நமக்குப் பிரத்யக்ஷ தெய்வங்கள். மாதா பிதாக்கள் நம் சரீரத்தைக் காப்பாற்றுகிறார்கள். ரோகம் வந்தால் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்கிறார்கள். அவர்கள் நம் தேகத்தைப் பொறுத்தமட்டும் ரக்ஷிப்பார்கள். ஆனால் இந்தத் தேகம் மீண்டும் மீண்டும் ஜன்மம் எடுக்கக் காரணமாகிறது.

சம்சாரமென்கிறது ஒரு பெரிய வியாதி. அதிலிருந்து தப்பிக்க, குருதான் உபகாரம் பண்ணமுடியும். எக்காலத்திலும் வியாதியில்லாத நிலையைக் கொடுக்க, குரு ஒருவரால் தான் முடியும். அவர்தான் கரையேற்ற முடியும். இவ்வளவு உயர்ந்தவரான குருவுக்கு உபமானம் ஏதாவது சொல்ல முடியுமா என்று பார்த்தால்—ஒருவன் பணக்காரனாக இருந்தால், குபேரன் போல் பணக்காரன் என்கிறோம். அந்தமாதிரி குரு யாரைப்போல் இருக்கிறார் என்றால், அவருக்கு நிகர் யாரும் இல்லை. ஆனால் குருவின் சக்தி பரம்பரையாய் எல்லாச் சிஷ்யர்களுக்கும் வரக்கூடியது. குருவினிடம் பக்தி பண்ணினால் வேண்டியதெல்லாம் கிடைக்கும். இதற்கு அநேக புராணக் கதைகள் உண்டு.

ஓர் ஊரில் ஒரு குரு இருந்தார். அவரிடம் அநேக சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒரு சிஷ்யன் மிகவும் மந்த புத்தியுள்ளவன். மற்ற சிஷ்யர்கள் எல்லா வித்தைகளையும் கிரஹித்துக் கொண்டு மிகவும் மேதாவிகளாய் இருந்தார்கள். படிப்பை முடித்துக்கொண்டு குருவினிடம் அனுமதி பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள். இந்த சிஷ்யன் மட்டும் பணிவிடை பண்ணிக்கொண்டு குருவினிடம்

இருந்தான். அவனுக்கு அநுக்ரஹகாலம் வரவில்லை. இந்த சமயத்தில் குருவுக்கு ஒரு பெரிய வியாதி வந்து விட்டது. பகவான் ஸ்வப்னத்தில் தோன்றி, 'நீ காசி வாசம் பண்ணினால் உன் வியாதி ஸ்வஸ்தமாகும்' என்றார். இந்த மந்தபுத்தியான சிஷ்யனுடன் ஐந்தாறு சிஷ்யர்கள் இருந்தார்கள். 'நீங்கள் என்னைக் காசிக்கு அழைத்துக்கொண்டு போகிறீர்களா?' என்று குரு கேட்டார். அவர்கள், 'எங்களால் முடியாது' என்றார்கள். அப்படித்தான் உலக ஸ்வாபாவம். ஒருவனுக்குப் பலமும் ஆரோக்கியமும் சம்பாத்யமும் இருக்கும் வரைக்கும் பெண்டாட்டி, பிள்ளைகள், பந்துக்கள் கூட இருப்பார்கள். சம்பாத்யம் இல்லாவிட்டால் ஒருவரும் லட்சியம் பண்ணமாட்டார்கள். ஆனால் மந்தபுத்தி 'நான் வருகிறேன்' என்றான். அவனை அழைத்துக்கொண்டு குரு காசிக்குப் போனார். அவர் வியாதியோ மிகவும் கஷ்டமான வியாதி. சிஷ்யன் சிரமப்பட்டு அவரைக் கங்கைக்கு அழைத்துப் போய், ஸ்நானம் பண்ணிவைத்து அவருக்காக பிக்ஷை வாங்கி அவருக்குப் போடுவான். இவ்வளவு செய்தும் குரு அவனைக் கோபித்துக் கொள்வார். சாப்பாடு நன்றாய் இல்லை என்பார். அப்படியும் தவறாமல் சிஷ்யன் குருவுக்கு பணிவிடை எல்லாம் பண்ணிக் கொண்டிருந்தான்.

ஒருநாள் சிஷ்யன் கங்கைக்குச் சந்தியாவந்தனத்துக்காகப் போனான். அப்பொழுது மகாவிஷ்ணு கருடாரூடராய் வந்து, சிஷ்யனைப் பார்த்து, 'நீ இவ்வளவு தீவிரமாக குருசேவை பண்ணுகிறாயே! ஒரு வரம் கேள்; நான் தருகிறேன்' என்றார். சிஷ்யன் மகாவிஷ்ணுவைப் பார்த்து, 'உங்களால் எனக்கு ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. எனக்கு உங்களிடத்திலிருந்து ஒரு வரமும் வேண்டாம்' என்று சொன்னான். உடனே மகாவிஷ்ணு சிவனிடத்தில் போய் இதைச் சொன்னார். இரண்டு பேரும் சிஷ்யனிடம் வந்தார்கள். பரமசிவன் சிஷ்யனுக்கு வரம் தருகிறேன் என்றார். மகாவிஷ்ணுவுக்குச் சொன்னபடியே சிஷ்யன் சிவனுக்கும் பதில் சொன்னான். பரமேசுவரன் நிர்ப்பந்தம் பண்ணினார். ஒரு தடவை, இரண்டு தடவை, பல தடவை சொல்லிப் பார்த்தார். அதன் பேரில், 'என் குருவைக் கேட்கிறேன். அவர் வரம் வாங்கிக் கொள்

Koviloor Digital Library

என்றால் அவருக்கு வியாதி ஸ்வஸ்தமாக வேண்டும் என்றுதான் கேட்பேன்' என்று சிஷ்யன் சொன்னான்.

பிறகு சிஷ்யன் குருவினிடம் போய் நடந்ததைச் சொன்னான். 'உனக்கு இஷ்டமிருந்தால் கேள்' என்று குரு சொன்னார். உடனே மகாவிஷ்ணு, பரம சிவன், மற்ற எல்லாத் தேவர்களும் வந்து குருவுக்கு வியாதி ஸ்வஸ்தமாக அநுக்ரஹம் பண்ணினார்கள். சிஷ்யனுக்கும் குரு பக்தியால் எல்லா வித்தையும் கிடைத்துவிட்டது. இதிலிருந்து குரு பக்தி பண்ணினால் வித்தை, சம்பத்து எல்லாம் கிடைக்கும் என்று தெரிகிறது.

புராணங்களும் வேதங்களும்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

வேதக்கொள்கைகளை எல்லாம் ஜனங்களுக்கும் தெளிவாக உணர்த்தும் பொருட்டு முன்னோர்களால் புராணங்கள் எற்படுத்தப்பட்டன. 'நான்' 'எனது' என்ற அகந்தையாலும் பிறர்க்குப் பலவிதங்களிலே தீங்கிழைப்பதும், தமக்குத்தாமே பலவிதமான அச்சங்களும் தீங்குகளும் வருவித்துக் கொள்ளுதலும் ஜீவர்களின் இய்றகை. இந்த இழிவு கொண்ட இயற்கையை ஞானத் தீயிலே போட்டுப் பொசுக்கிவிடுதல் வேதரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட யக்ஞம் அல்லது வேள்வியின் கருத்து.

எல்லாம் ஈசன் செயல்; எல்லாம் அவனுடைய ரூபம். கம்ப ராமாயணத்தில் ஹிரண்யனுக்கு ப்ரஹ்லாதாழ்வான் உபதேசித் தருளியபடி, அவன்,

> சாணிலு முளன்; மற்றோங்கார் அணுவினைச் சத கூறிட்ட
> கோணிலும் உளன்; மாமெருக் குன்றிலும் உளன்; இந்நின்ற
> தூணிலும் உளன்; யான் சொன்ன சொல்லிலும் உளன்.

அவனைத் தவிர வேறு பொருளே கிடையாது.

'அவனன்றி ஓர் அணுவுமசையாது.' ஆதலால், இந்த உலக முழுவதும் பரிபூரண அழகுடையது; பரிபூரண மங்களத்தன்மையுடையது அந்தக் கடவுள் ஸர்வ சக்தியுடையவன். ஆதலால் கீதையிலே சொல்லியபடி, எல்லாப் பொறுப்புகளையும்

Koviloor Digital Library

அவன் பாதங்களிலே சுமத்திவிட்டு, நாம் எப்போதும் கவலையின்றி ஆனந்தத்துடன் வாழும்படியாக நம் மனத்தைத் திருத்திக் கொள்ளக் கடவோம் என்ற துணிவே ஞானத்தீ என்று சொல்லப்படும். அது வேதாக்னி.

இங்ஙனம் நிச்சயிக்கப்பட்ட கடவுளிடத்தும், அவனுடைய கலைகளாகிய எல்லா ஜீவர்களிடத்தும் தீராத, மாறுதஅன்பு செலுத்துதலே பக்தி என்று சொல்லப்படும். இந்த பக்திதான் முடிவான் ஸாதனம். இதனுல் ஈசன் நம்மிடத்தே கருணை பூண்ட நமக்கு மோக்ஷசாம்ராஜ்யத்தைக் கொடுப்பான். இது அமிர்த பானம். இதுதான் நான்கு வேதங்களின் தீர்ப்பு. இந்தக் கடவுளை முழுமையாக நோக்குமிடத்தே, வேதம் அவனுக்கு 'தத்' (அஃது) அதாவது பரப்ரம்மம் என்ற 'ஸத்' (உண்மைப் பொருள்) முதலிய பெயர்களும் கொடுக்கிறது.

படைத்தல், காத்தல், மாற்றுதல், அருள் செய்தல் வலிமையுடைமை, ஒளியுடைமை எங்கும் பரந்திருக்குந் தன்மை, பலபடத் தோன்றுந்தன்மை, ஆனந்தஇயல்பு முதலிய கடவுளின் எண்ணிறந்த குணங்களையும் இயல்புகளையும் பிரிவுபடுத்தி நோக்குமிடத்தே, வேதம் அந்தந்தக் குணங்களுக்கும் இயல்புகளுக்கும் தக்கபடி, அவன் ஒருவனுக்கே பிரமன், விஷ்ணு, சிவன், இந்திரன், வாயு, ஸோமன், ஸூர்யன், வருணன், அக்நி, பகவான் முதலிய பல்வேறு நாமங்களை வழங்குகிறது. இந்த விஷயத்தை ரிக்வேதம் 'ஏகம் ஸத்' என்ற தொடக்கமுடைய மந்திரத்தில் மிகவும் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது.

எனவே, வேதத்தின் வழி நூல்களாகிய புராணங்களில், இக் கடவுளை உணர்வதற்கு ஸாதனங்களாகிய தவம், பக்தி, யோகம் முதலியவற்றை அனுஷ்டிக்கும் நெறிகளும், இந்த வழியே செல்ல விரும்புவோனுக்கு இன்றியமையாதனவாகிய திடசித்தம், நேர்மை, ஜீவகாருண்யம் முதலிய குணங்களைப் பாக்கப்படுத்திக் கொள்ளும் நெறிகளும், இந்தக் குணங்கள் ஏற்படாதபடி தடுக்கும் பயம், கர்வம் கோபம், நிஷ்டுரம் முதலிய அசுர குணங்களை அறுக்கும் நெறிகளும் பல திருஷ்டாந்தங்களாலும் சரித்திரங்களாலும் உவமைக் கதைகளாலும் உபதேசங்களாலும் விஸ்தாரமாகக் காட்டப்பட்டிருக் கின்றன.

Koviloor Digital Library

அக்னி உபாஸனை

பார்ஸி மதத்தினர் அக்னியை வணங்குகிறார்கள். நம் ஸநாதன மதத்திலும் அக்னி உபாஸனை முக்கிய அம்சமாகும். பிரம்மசாரிகள் தினசரி அக்னியில் ஸமிதாதானம் செய்யவேண்டும். அதாவது, தினசரி அக்னி உண்டாக்கி விதிப்படி அதை வணங்க வேண்டும்.

கிருகஸ்தாச்ரமத்தில், அக்னி உபாஸனை விவாகத்திலிருந்தே ஆரம்பமாகிறது. விவாகத்தின்போது வளர்க்கும் அக்னியைக் காப்பாற்றி, அதை வரன் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போய், அன்று சாயங்காலம் சந்தியாவந்தனம் செய்துவிட்டுப் பிரவேச ஹோமமும் ஸ்தாலீ பாகமும் செய்துவிட்டு ஔபாஸனம் ஆரம்பம் செய்ய வேண்டும். அதிலிருந்து அந்த அக்னியைக் காப்பாற்றி ஒரு வருஷம் ஔபாஸனம் செய்து, பிறகு சேஷஹோமம் செய்ய வேண்டும். குறைந்த பக்ஷம் மூன்று நாட்களாவது (த்ரிராத்ரம்) ஔபாஸனம் செய்து சேஷஹோமம் செய்ய வேண்டும் என்று ஆச்வலாயன ஸூத்ரம் கூறுகிறது. மற்றவர்கள் மூன்று நாள் செய்ய வேண்டும். அதுதான் நான்கு நாள் விவாகம் செய்வதன் நோக்கம்.

அப்படி விவாகத்தன்று மாலைநேரத்திற்குள் போகமுடியாத தூரத்தில் வரன்வீடு இருந்தாலும், போவதற்குப் பல நாட்களானாலும், அங்கே போய்ச் சேர்ந்தே பிரவேச ஹோமம் செய்ய வேண்டும். இப்படி வரன் வீட்டுக்கு அக்னி குண்டத்தை எடுத்துச் செல்லும்போது, வண்டியில் ஏற்றுவதற்கும், நதி முதலிய நீர்நிலைகளைத் தாண்டுவதற்கும், வழியில் ஏற்படக்கூடிய கெட்ட சகுனம் முதலிய இடையூறுகளினின்றும் ரக்ஷிப்பதற்கும் ஏற்பட்ட அநேக மந்திரங்கள் விவாக காலத்தில் சொல்லப்படுகின்றன. அவற்றின் பொருள் தெரியாமல் நாம் ஏதோ சொல்லிக்கொண்டு வருகிறோம்.

அப்படிக் கொண்டுவரப்பட்ட அக்னி, தம்பதிகளால் தினமும் காலையிலும் மாலையிலும் ஔபாஸனம் செய்து, அக்ஷதையிட்டுக் காப்பாற்றப்படவேண்டும். அந்த அக்னியில் பாகம் செய்து வைச்வதேவம் செய்ய வேண்டும். பிரதி பிரதமையன்றும் அந்த

Koviloor Digital Library

அக்னியில் பாகம் செய்த அன்னத்தைக் கொண்டு ஹோமம் செய்ய வேண்டும். அதற்கு ஸ்தாலீபாகம் என்று பெயர். புருஷன் உரிய காலங்களில் வீட்டில் இல்லாமல் வெளியே போயிருந்தால், மனைவி ஒவ்வொரு வேளையும் ஒருபிடி அரிசி அந்த ஔபாஸந அக்னியில் போட்டு அதைக் காப்பாற்றி வரவேண்டும். சில நாட்களுக்கு அப்படியும் செய்வதற்கில்லாமல் ஏற்பட்டுவிட்டால், அத்தனை நாட்களுக்கு அக்னியில் இடவேண்டிய அரிசியைத் தானம் செய்துவிட்டு மறுபடி ஆரம்பிக்க வேண்டும். இதற்குப் புநஸ்ஸந்தானம் என்று பெயர். ஔபாஸன அக்னியைக் கையில் எடுத்துப்போக முடியாமல், வேறு ஊருக்குப் போக நேர்ந்தால், அந்த அக்னிசக்தியை ஒரு ஸமித்தில் மாற்றி எடுத்துப் போய், அங்கு அந்த ஸமித்திலுள்ள அக்னி சக்தியை லௌகிக அக்னியில் இறக்கி ஔபாஸனம் ஆரம்பிக்க வேண்டும். இப்படி ஸமித்தில் மாற்றுவதற்கு ஸமித்ஸமாரோபணம் என்று பெயர்.

ஆதானம் செய்த கிருகஸ்தர்கள், மூன்று அக்னி வளர்த்து அக்னிஹோத்ரம் என்ற அக்னி உபாஸனையும் செய்யலாம். இதுவும் தினம் காலையிலும் மாலையிலும் தவறுமல் விதிப்படி செய்ய வேண்டிய கர்மாவாகும். ஆனுல் புருஷன் உரிய காலங்களில் வீட்டில் இல்லாவிட்டால், ஔபாஸனம் போல் அல்லாமல் ஸ்திரீகள் ஒரு ரித்விக்கைக் கொண்டு இதற்கு ஹோமம் செய்யச் சொல்ல வேண்டும். இந்த அக்னியிலிருந்து மூட்டிய அடுப்பில் சமையல் செய்ய வேண்டும். இதனுல் தான், இன்றும் ஆந்திர தேசத்தில் அடுப்புக்கு நெருப்புக் கேட்பதானுல், 'அக்நிஹோத்ரம் காவல' என்று கேட்கிருர்கள். இந்த த்ரேதாக்னியை எடுத்துப்போக முடியாதபடி வெளியூருக்குப் போக நேர்ந்தால் இந்த அக்னிசக்தியை அரணிக்கட்டையில் மாற்றிக்கொண்ட போய், பிறகு அரணிக்கட்டையைக் கடைந்து அக்னி உண்டாக்கி அக்னிஹோத்ரம் ஆரம்பிக்க வேண்டும். இதற்கு அரணி ஸமாரோபணம் என்று பெயர். அரணிக்கட்டை வன்னிமரத்திலுண்டான அரசங்கட்டையால் செய்யப்பட்டதாகும். இவற்றைக் கடைந்தால் நெருப்புப் பொறி உண்டாகும். அதிலிருந்து அக்னி எடுத்துக்கொள்வது வழக்கம்.

இப்படி ஆயுட்காலம் முழுவதும் காக்கப்பட்ட அக்னியிலேயே, மரணத்திற்குப் பின், ஒருவருடைய சரீரம் ஆகுதி செய்யப்பட வேண்டும். பிரேதத்துடன் நெருப்புச் சட்டி எடுத்துப்போவது என்பது இந்த அக்னியைத்தான்.

ஒருவருடைய பத்னி அவருக்கு முன்னால் காலமானால் அந்த அக்னி அவளுக்கு உபயோகப்படுத்தப்பட வேண்டும். அபத்னீகனுக்கு அக்னிகாரியம் செய்ய உரிமை இல்லை. இவன் 'அநாச்ரமி' ஆகிறான். இவன் இறந்தால் சாதாரண அக்னி உண்டாக்கியே தகனம் செய்ய வேண்டும். ஆனால் பத்னி இறக்கும் தறுவாயில் அக்னியைப் பாகம் செய்துகொள்ளலாம். அப்படிச் செய்துகொண்டால் அந்த அபத்னீகனுக்கு அக்னிஹோத்ரம் முதலியவற்றுக்கு அதிகாரம் உள்ள அக்னி ஸித்திக்கும்.

இதிலிருந்து, அக்னியின் உரிமையில் ஸ்திரீகளுக்கு இருக்கும் முக்கியத்துவம் தெரிகிறது.

அநாச்ரமியாக யாரும் இருக்கக்கூடாது. அபத்னீகன் ஸந்நியாஸ ஆச்ரமத்தை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அது அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

இதேமாதிரி பிரம்மசரிய ஆச்ரமத்திற்கும் அநேக நியமங்கள் இருக்கின்றன. உபநயனம் ஆனதிலிருந்து பிரம்மசரியம் ஆரம்பமாகிறது. உபநயனம் என்றால் (ஆசிரியரின்) சமீபத்தில் அழைத்துச் செல்லுதல், ஆசிரியரிடத்தில் வேதாப்பியாசம் செய்ய அழைத்துச் செல்லுதல், பிரம்மசரியத்திற்கு அநுஷ்டிக்க வேண்டிய பொது நியமங்கள்: அரையில் கௌபீனமும், மேல் கிருஷ்ணாஜினமும் (மான்தோல்) அணிவது; தண்டம் வைத்துக்கொள்வது; பிக்ஷாசரணம் செய்வது, அந்தக் கிருஷ்ணாஜினத்திலேயே படுக்க வேண்டும். விசேஷ நியமங்களாவன:— வேதம் கற்கும்பொழுது, ஒவ்வொரு வேதப்பகுதிக்கும் தனித்தனி நியமங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றைத் தவறாமல் அநுஷ்டிக்க வேண்டும். இப்படிச் சிறுவயதிலேயே, காமாதி விகாரங்கள் மனத்தில் ஏற்படும் முன்னமே வித்தியாப்யாசம் பூர்த்தியாக வேண்டும். வித்தியாப்யாசம் முடிவடைந்த பிரம்மசாரியை மறுபடி வீட்டுக்கு அழைத்துச் செல்வார்கள். அதற்கு ஸமாவர்த்தனம்

என்று பெயர். அப்படி அழைத்து வந்ததும் அவனுக்கு விவாகம் செய்துவைக்க வேண்டும். வித்தியாப்யாசம் முடிந்ததும் பிரம்மசரியம் முடிவடையுமாதலால் விவாகம் செய்விக்காவிட்டால் அநாச்ரமி ஆவான். அநாச்ரமியாக யாரும் ஒரு க்ஷணமேனும் இருக்கக்கூடாது. ஆதலால், ஸமாவர்த்தனத்திற்குச் சிறிது முன்னமே விவாகம் நிச்சயம் செய்து, ஸமாவர்த்தனம் ஆனதும் விவாகம் செய்விக்க வேண்டும். இதனுல்தான் விவாக காலத்தில் இப்பொழுதும் ஸமாவர்த்தனம் என்று செய்யப்படுகிறது. இதுவும் நாம் விஷயம் தெரிந்து கொள்ளாமல் செய்யும் காரியங்களில் ஒன்ருக இருக்கிறது.

நைஷ்டிகப் ப்ரம்மசர்யமாவது, வித்தியாப்யாசம் முடிந்தபிறகும், குரு சுச்ரூஷை செய்துகொண்டு ஆயுட்காலம் முழுவதும் பிரம்மசாரியாகவே இருப்பது. இது கலியுகத்திற்கு ஏற்றதாகக் கூறப்படவில்லை. ஸமாவர்த்தனத்திற்குப் பிறகு, நைஷ்டிக ப்ரம்மசாரியாக இருப்பதாகத் தீர்மானித்து, ப்ரம்மசாரி தீர்த்தயாத்திரைக்குக் கிளம்புவதாகவும், அவனைப் பெண்ணின் தகப்பனுர், தம் கன்னிகையை விவாகம் செய்து கொடுப்பதாகவும், காசியாத்திரை போகவேண்டாமென்று தடுத்துக் கன்னிகாதானம் செய்து கொடுக்கும் பாவனையில் இக்காலத்தில் விவாகத்தில் 'பரதேசக் கோலம்' பார்க்கிறேரும்.

கிருகஸ்தாச்ரமத்திலிருந்து அக்னி உபாஸனை முதலிய கர்மாக்களையும் தர்மங்களையும் அநுஷ்டித்து, குமாரர்கள் குடும்பபாரத்தை ஏற்கும் நிலை வந்ததும், வானப்ரஸ்தாச்ரமத்தை ஏற்க வேண்டும். கலியில் வானப்ரஸ்தாச்ரமம் வேண்டாமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

	RAHU KALAM	YAMAKANTAM
Sunday	04:30 p.m - 06:30	12.00 noon - 01:30 p.m
Monday	07:30 a.m - 09:00	10:30 a.m - 12.00 noon
Tuesday	03:00 p.m - 04:30	09:00 a.m - 10:30
Wednesday	12.00 noon - 01:30	07:30 a.m - 09:00
Thursday	01:30 p.m - 03:00	06:00 a.m - 07:30
Friday	10:30 a.m - 12:00	03:00 p.m - 04:30
Saturday	09:00 a.m - 10:30	01:30 p.m - 03.00

Koviloor Digital Library

ஸ்நான பேதங்கள்

மந்திரமின்றி, விதி, தவறினவன் வ்யர்தமாக மூழ்கினவனே யன்றி பலன் ஒன்றும் உண்டாகாது. சரீரக் கஷ்டந்தான் மிச்சமாகும். மீன், ஆமை, தவளை, முதலைகள் ஸதா புண்யதீர்த்தங்களில் முழுகிக்கிடந்தும் பலனை எப்படி அடைகிறதில்லையோ அதுபோல இவனுடையதுமாகும். பலனில்லாமற் போவதோடு நெடுநாள் நரகவாழ்க்கையும் ப்ராப்தமாகும். ஸ்நானம் நித்யம், நைமித்திகம், காம்யம், க்ரியாங்கம், மலாப கர்ஷணம், க்ரியா ஸ்நானம், என அறுவகையாகும். தினந்தோறும் செய்யும் காலை, மாத்யாந்ஹிக ஸ்நானங்கள் நித்யமாகும்.

பிணப்புகை, தூரஸ்திரீ இவர்கள் நெருங்கி விட்டாலும் ஸ்பர்சிக்கத் தகாதவைகளை ஸ்பர்சிப்பது இவற்றைச் சுத்திசெய்து கொள்வதற்காகவும் செய்வது நைமித்திக ஸ்நானமாகும். ஜனனம், மரணம், ஸங்க்ராந்தி, ச்ராத்தம், ஜன்மதினம், க்ரஹணம், பர்வங்கள் இவைகளும் நைமித்திகத்தில் சேர்ந்துவிடும்.

ஓர் பலனை விரும்பி (பசு, புத்ராதிகள்) சில விசேஷதினங் களில் செய்யப்படுவது காம்ய ஸ்நானமாம்.

ஓர் வைதிக க்ரியையைச் செய்யவேண்டி அதற்கு அங்கமாய்ச் செய்யப்படுவது க்ரியாங்க ஸ்நானமாகும்.

தேஹ ஆரோக்யத்தை உத்தேசித்து எண்ணெய் முதலிய தேய்த்துக்கொள்ளுதலுக்கு மலபேர்ஷணமென்று பெயர். (தேஹ அழுக்கைப் போக்கிக் கொள்ளல்).

நதி, புராண மஹிமைபெற்ற புண்ய தீர்த்தம் இவைகளில் செய்வதற்கு க்ரியா ஸ்நானமெனப்படும்.

ஸ்நானார்ஹ தீர்த்தங்கள்

நதி, தடாகம், குளம், ஸரஸ், வாய்க்கால், மலையருவி, ரிஷிகளால் புகழப்பட்ட தீர்த்தம், நதம் (கிழக்கேயுண்டாகி மேற்கு ஸமுத்திரத்தில் ஸங்கமமடையும் நதி), தேவகாதம், கிணறு முதலிய தீர்த்தங்கள் ஸ்நானத்திற்கு அர்ஹமாகும். மலையிலுண்டாகி ப்ரவஹித்து ஸமுத்திரத்தில் கலப்பதே பாவங்களை ஒழிக்கக்கூடிய மஹாநதி எனப்படும். சாந்த்ராயணம், மூன்று க்ருசரம், முப்பதினாயிரம் காயத்ரீ ஜபம், மஹாநதி ஸ்நானம் இந்நான்கிற்கும் பலன்

ஒன்றேயாகும்.மலையிலோ, பூமியிலோ உண்டாகிவேறு நதியோடு கலந்துவிடுவது ஸ்ரோதஸ்ஸாகும். மலைகளிலோ, வேறெங்கேயாவதோ வற்றுமலும், விசாலமாயும், தாமரையுடையதுமானதற்கு ஸரஸ் என்று பெயர். மலையிலாவது, பூமியிலாவது, வற்றுமல் கரைகளோடு கூடி குறுகியோ, விசாலமாயோ இருக்கும் ஜலாசயத்திற்கு தேவகாதம் என்று பெயர். நதியின் நீர் வெட்டிக்கொண்டு வந்து பயிர்களுக்கு உபயோகப் படும்படி தேக்கப்பட்டிருப்பதற்கு நாளம் என்று பெயர். தேக்கமான தீர்த்தங்களுக்கு தடாகம் என்று பெயர். படித்துறைகளோடு சதுரமாக கட்டப்பட்டிருக்கும் ஜலாசயத்திற்கு குண்டம் என்றும், மலையிலிருந்து விழுவதற்கு தாரை என்றும், வீடுகளிலும், நாம் வயல்கள் நடுவில் பார்க்கும் கிணறுகளுக்குக் கூபம் என்றும் பெயர்.

அருகே நதியிருக்க வேறு தீர்த்தத்தில் ஸ்நானங்கூடாது. ஏராளமான நீரிருக்க உபாயமான அல்ப நீரில் ஸ்நானஞ் செய்யக்கூடாது. பர்வகாலந் தவிர மற்ற காலங்களில் ஸமுத்ர ஸ்நானமே கூடாது. பர்வ காலத்தில் ஓர் தடவை ஸமுத்திரத்தில் ஸ்நானஞ் செய்தானகில் நூறுயிரம் ஜன்மங்களில் செய்திருக்கும் பாவங்களையும் துலைத்துவிடுகிறுன். இதைத் தன் மனைவி கர்ப்பமாய் இருக்குங் காலத்தில் செய்யக்கூடாது. செய்தால் ஜனிக்கும் சிசு நெடு நாள் ஜீவித்திராது. புத்திரகாமி ஞாயிறு, செவ்வாய்களில் பர்வங்கள் வந்தால் அத்தினங்களில் செய்யக்கூடாது. ஸேது ஸ்நானத்திற்குக் காலநியமம் யாதுமில்லை. ஸமுத்ர ஜலத்தால் ஆசமனம் செய்யக் கூடாது என்று ச்ருதியே விதித்து விட்டது. தர்ப்பணம் மட்டும் செய்யலாம். ஸூர்யாஸ்தமனத்தின் பிறகு நதீ ஸ்நானம் கூடாது. ஓர் நதியில் ஸ்நானஞ்செய்யும்போது மற்றென்றைப் புகழக்கூடாது.

இவ்வித புண்ணிய தீர்த்தம், க்ஷேத்ரங்களுக்கும் உண்டு. அப்படிப் புகழ்ந்தால் புண்யம் போய்விடுகிறது. ஆனல் கங்கை, கயை, குருக்ஷேத்ரம் ப்ரபாஸம், நைமிசம் இவைகளை ஸ்நான காலத்தில் ஸ்மரிக்க வேண்டியது. ஸ்த்ரீ, நாஸ்திகர், ரோகிகள், குழந்தைகள், பாஷண்டர், அசுசிகள் இவர்களுடன் சேர்ந்து ஸ்நானம் செய்யக்கூடாது. வற்றிப்போன நதிகளில் வெள்ளம்வந்தால் முதல் மூன்று நாள் அதில் ஸ்நான பானங்கள் செய்யக்கூடாது. வென்னீர் ஸ்நானம் நிஷ்ப்ரயோஜனம், சரீர சுத்தியைத் தவிர. நைமித்திக ஸ்நானம் வெந்நீரில் ரோகிகளுக்குத் தவிர மற்றவர்களுக்கு

ஸர்வப்ரகாரத்தாலும் த்யாஜ்யமாகும். செய்பவன் கோஹத்தி பாவத்தை அடைகிறான். ஆரோக்யம், புத்ரமித்ர லாபங்களும் ஏற்படாது. தேவாலய ஸமீபமான தீர்த்தம் அசுத்தமாயிருப்பினும் விரஜை, சிவகங்கைகளுக்கு ஸமமானதால் மகாபாபங்களைப் போக்கும் அதி புண்ய தீர்த்தமேயாகும். ஒருவருக்கொருவர் பின்புறமாயிருந்து ஸ்நானஞ் செய்யக்கூடாது. ஸ்நானஞ் செய்த பிறகு பல் துலக்கக்கூடாது.

நைமித்திக ஸ்நானம் (க்ரஹண ஸ்நானம்)

க்ரஹண புண்ய காலங்களில் உலகிலுள்ள தீர்த்தங்கள் யாவும் (கிணறு உள்பட). கங்கா தீர்த்தத்தோடும், ப்ராம்ஹணர் யாவரும், சதுர்முக ப்ரஹ்மாவோடும், ஸர்வதானமும் பூதானத்திற்கும் ஸமமாகும். ரோகியாயிருப்பவன் கூட வென்னீரிலாவது ஸ்நானம் செய்யவேண்டுமேயொழிய க்ரஹண ஸ்நானத்தை இரவாயிருந்தாலும் அந்த சமயத்தில் செய்யாமலிருக்கக் கூடாது.

ஜனன மரணாசௌசமுள்ளவனும் ஸ்நானம் செய்ய வேண்டும். செய்யாதவன் ஏழு ஜன்மங்களில் குஷ்டரோகியாய்ப் பிறந்து அளவற்ற துக்கங்களை அனுபவிப்பான்.

க்ரஹணத்திற்கு முன்பு சமையலானவைக்கு ஸூதக தோஷம் ஏற்பட்டுவிட்டபடியால் பின்பு அதைப் புசிக்கக் கூடாது. க்ரஹணத்தின் ஆத்யந்த புண்யகாலம் முழுவதும் ஜபம் செய்ய வேண்டியது. தூங்கக்கூடாது. போஜனமும் செய்யக் கூடாது. விட்டபிறகு ஸ்நானம் செய்து போஜனம் செய்யக்கடவன். ச்ராத்தம் (தர்ப்பண ரூபத்திலாவது) செய்யாதவன் மீளா நரகத்திற்காளாகிறான். க்ரஹண ஸ்பர்சகாலத்தில் ஸ்நானம் பிறகு ஜபம், ஹோமம், மோக்ஷகாலத்தில் தானம், மோக்ஷமான பிறகு ஸ்நானமும் செய்ய வேண்டியது. ஸூர்யக்ரஹணத்தில் ஆரம்பத்திலும், சந்த்ர க்ரஹணத்தில் விட ஆரம்பிக்கும் பொழுதும் தர்ப்பணம் செய்ய வேண்டும். க்ரஹணத்தில் ஆதி முதல் அந்தம் வரையிலுமே புண்யகாலமாகும். ஞாயற்றுக்கிழமை ஸூர்ய க்ரஹணமும், திங்கட்கிழமை சந்திரக்ரஹணமும் ஸம்பவிப்பதற்கு சூடாமணி புண்ணியகாலமென்று பெயர். இவ்வித க்ரஹணத்திற் செய்யும் தானாதிகளுக்கு மற்ற க்ரஹணங்களைவிட கோடி பங்கு அதிகமான பலனுண்டாம். மோக்ஷமாகாமலேயே க்ரஸ்தாஸ்தமாய் விடுங்காலங்களிற் அது த்ருஷ்டிக்குத் தெரியும் வரையிற்தான்

Koviloor Digital Library

புண்ணியகாலமாகும். பிறகு மறுபடியும் சுத்தமாய் மறு ராத்ரியோ பகலோ சந்த்ர ஸூர்யக்ரஹணங்களில் தெரிந்தபிறகு ஸ்நானஞ்செய்து போஜனம் செய்யவேண்டியது. தெரியாத க்ரஹணங்களுக்குப் புண்ணிய காலம் இல்லை. க்ரஹணத்திற் போலவே ஸங்கராந்தி புண்ணிய காலத்திலும் ஸ்நானம் செய்யாதவனுக்கு ஏழு ஜன்மங்களில் ரோகியாய் ஜனித்து மிகுந்த துக்கங்களை அனுபவிக்கிருன். அப்புண்ணிய காலங்களிற் கொடுக்கும் தான ஹவ்யகவ்யங்களை ஸூர்யன், செய்பவர்களுக்கு ஏழு ஜன்மங்கள்தோறும் திருப்பித் திருப்பிக் கொடுத்துக் கொண்டு வருகிருன்.

0பனிரண்டு ஸங்கராந்தி புண்ணியகால நிர்ணயம்

மேஷம் முதலிய பனிரண்டு ராசிகளில் ஸூர்யன் க்ரமமாய் ஸஞ்சரித்து வருகையில் ஒரு ராசியிலிருந்து மற்ருேர் ராசிக்கு ப்ரவேசிக்குங்காலமே ஸங்கராந்தி புண்ணிய காலமெனப்படும். (தை) மகரஸங்க்ராந்திக்கு உத்தராயணதென்றும் கடகத்திற்கு (ஆடி) தக்ஷிணுயனமென்றும் இரண்டு அயனங்களாகும். முந்தியதற்கு பிறந்த பிறகு இருபது நாழிகையும் பிந்தியது பிறப்பதற்கு முந்தியே இருபது நாழிகையும் புண்யகாலமாகும். மேஷம் (சித்திரை) துலாம் (ஐப்பசி) இவ்விரு விஷுவ புண்ணியகாலங்களுக்கும் பிறப்பதற்கு முன்பின் பத்துபத்து நாழிகைகள் புண்ணியகாலமாகும். கன்னி (புரட்டாசி), மிதுனம் (ஆனி), மீனம் (பங்குனி).

தனுர் (மார்கழி) இந்நான்கு ஷடசீதீ புண்ணியகாலங்களுக்கும் வந்த பிறகு அறுபது நாழிகை புண்ணியகாலமாகும். வ்ருஷபம் (வைகாசி), வ்ருச்சிகம் (கார்த்திகை), கும்பம் (மாசி), ஸிம்ஹம் (ஆவணி) இந்நான்கு விஷ்ணுபதி புண்ணியகாலங்களுக்கும் முன்பின் பதினறு நாழிகைகள் புண்ணியகாலங்களாகும். விஷ்ணுபதி நாலும் இரு விஷூக்களை விடப் புண்ணியமானவைகள். இரவு முன்பாதி ஸங்க்ரமணத்திற்குப் பகல் பின்பாதியும், இரவு பின் பாதி ஸங்க்ரமணத்திற்கு மறுநாட் பகல் முன்பாதியும் புண்ணிய காலமாகும். மாஸப் பிறப்புகளில் எவ்வளவுக்கெவ்வளவு ஸங்க்ரமண காலத்தை நெருங்கி இருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அப்புண்ணிய காலதர்பணத்திற்கு விசேஷமுண்டு.

காம்ய ஸ்நானம்

காம்ய ஸ்நானங்களுக்கு நியமங்கள் விசேஷமாய்க் கூறியிருக்கின்றன. ஸந்தானம், ஸம்பத்து, பலப்ராப்திகளும்

Koviloor Digital Library

விசேஷமாயுண்டு. ஆனால் நியமங்கள் தவறி நடப்பின் இருக்கும் ஆயுள், ஐச்வர்யம், பசு, புத்திராதிகளின் நாசமும் விசேஷமாய் ஏற்பட்டு விடுமென்றிருக்கிறது. துலா(ஐப்பசி) ஸ்நானம், மாக (மாசி) ஸ்நானங்களுக்கும் விசேஷ பலன் கூறப்பட்டிருக்கின்றன.

புருஷர்களுக்கு நித்யதிலேயே உஷஸ்நானமும் விசேஷ பலன்களும் ஸ்நான கட்டத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அது தவிறி இம்மாதங்களில் மட்டும் காம்யமாய் ஸ்நானம் செய்பவர்களுக்கும் விசேஷ பலன் உண்டாகாது.

அப்யங்கஸ்நானம் (எண்ணெய் தேய்த்துக் கொள்ளல்)

அப்யங்க ஸ்நானத்தில் திதி ஒரு பங்கும், வாரம் எட்டு பங்கும் அதிக பலமுடையவைகளாகும். திங்கள், புதன், சனி வாரங்கள் எண்ணெய் தேய்த்துக்கொள்ள அர்ஹமாகும். த்விதீயை, சதுர்த்தி, பஞ்சமி, நவமி, த்ரயோதசி இத் திதிகளும் கூடுமானவையே. மற்ற திதி வாரங்களும், ஜன்ம நக்ஷத்ரம், மாஸப் பிறப்பு, வ்யாதீபாதம், சித்திரை, ஹஸ்தம், திருவோணம், திருவாதிரை, உத்திரம், கேட்டை, வ்ரததினம், க்ஷௌரம் செய்துகொண்டநாள், விவாஹம், ஸூக துக்க காலங்கள், பிணத்துடன் சென்றவன் இத்தினங்களில் தைல ஸ்நானம் கூடாது.

துக்கம், காந்தி, அற்பாயுஸ், ஸம்பத்து, தரித்திரம், வ்யாதி ஸர்வ கார்யஸித்திகள் ஞாயிறு முதலிய வாரங்களுக்கு முறையே அப்யங்க ஸ்நான பலனாகும், சிரஸில் தேய்த்துக்கொண்ட எண்ணெயால் தேஹத்தை தொடவுங் கூடாது. ஸூரையில் மூழ்கினவனுக்காகிலும் பிராயச்சித்தம் விதிக்கப்படுகிறது. உஷபராத காலங்களில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுபவனுக்குப் ப்ராயச்சித்தமே இல்லை.

அடுத்த இதழ் முதல் வாசகர்களின் வைதிக (வேத தர்ம) ஸம்பந்தமான கேள்விகளுக்கு பதில்கள் ப்ரசுரிக்கப்படும். உங்கள் கேள்விகளை உடனே எழுதி அனுப்புங்கள்.

Koviloor Digital Library

ப்ராத கால அப்யங்க நிஷேதம்

உதித்து ஐந்து நாழிகைக்கு மேற்பட்டுதான் தைல ஸ்நானம் ஆசரிக்க வேண்டியது. இது தீபாவளி ஒரு தினத்திற்கு மட்டுந்தான் கூடும். நிஷித்த திதி வார நக்ஷத்திரங்களில் எண்ணெய் தேய்த்துக்கொள்ள இச்சிப்பவன் எண்ணெயோடு கொஞ்சம் நெய்யோ, ஜலமோ விட்டுத் தேய்த்துக்கொண்டால் தோஷம் ஏற்படுகிறதில்லை.

தீபாவளி ஸ்நானம்

தைல ஸ்நானம்செய்து ஸம்பத்தை அடைவதற்காக புது வஸ்த்ரம் தரித்து தீபங்களால் நீராஜனம் என்பது லக்ஷ்மியிடம் இதில் செய்யப்படுவதால் இதை தீபாவளி என்கின்றனர். தீபாவளி தினத்தில் தைலத்தில் லக்ஷ்மியும், வெந்நீரில் கங்கையும் வஸிக்கிறார்கள். இவ்விரண்டினால் ஸ்நானம் செய்பவன் தரித்திரத்தைத் துலைத்துக் கொள்ளுகிறான். நரகாஸுரனை பகவான் வதைத்த புண்ணிய காலமாகையால் நரக சதுர்தசி ஸ்நானம் ஜனங்களுக்கு நரக பீதியைப் போக்கிவிடுகிறது. சுத்த பாத்திரத்தில் எடுத்து வைக்கப்பட்ட தீர்த்தம் ஓரிரவு சென்றதேயானால் அபரிசுத்தமாய் விடும். ப்ராம்ஹணர்களுக்கு தைலாப்யங்கம் செய்வித்தானாகில் நூறு வருஷம் கங்கையில் ஸ்நானம்செய்து அடையக்கூடிய பலனை ஸந்தேஹமின்றி அடைகிறான்.

க்ரியா ஸ்நானம்

தேவதா நிர்மாணமான புண்ணிய தீர்த்தம். புண்ணிய நதிகள் இவைகளில் யாத்திரைசெய்து ஸ்நானம் செய்வதே க்ரியா ஸ்நானமாம். இதில் முதலில் ஸ்நானம் விதிப்படி செய்து பிறகு ஸமந்த்ரகமாய் அகமர்ஷணாதி பல ரிக்குகளைச் சொல்லி ஸ்நானம் செய்வதே விதியாகும். க்ருஹஸ்த்ர்கள் குடும்பத்தை விட்டு தீர்த்தாடனம் செய்வதை ரிஷிகள் அங்கீகரிக்கவில்லை. யாத்திரையில் குடைபிடித்துச் சென்றால் தீர்த்த யாத்திரையின் காற்பலனையும், பாதரக்ஷை தரித்துச் சென்றால் பாதி பலனையும், வாஹனங்களிற் சென்றால் முக்காற் பங்கு பலனையும், டோலிகை, பல்லக்கு முதலியவைகளிற் சென்றால் முழுபலனையும், மாட்டுவண்டியிற் சென்றால் முழுபலனும் போகிறது.

பிறர் உதவியாற் செய்தவன் பதினாறில் ஒரு பங்கு பலனையும், வேறொரு கார்யமாய்ப் போகும் நடுவில் இது நேர்ந்தால் பாதி

Koviloor Digital Library

பலனையும் வேறொருவருக்கு ஸஹாயமாய்ச் சென்றால் ஸ்நான பலனை மட்டுமும் அடைகிறான். புண்யாத்மாவாய் இருப்பவர் செய்யின் புண்ணிய தீர்த்த ஸ்நான பலன் முழுமையும் அடைகின்றனர். பிதா, மாதா, குரு முதலிய வேறொருவரை உத்தேசித்து ஸ்நானம் செய்தால் அவர்கள் அதின் பனிரண்டில் ஒரு பங்கு பலனை மட்டுமே அடைகின்றனர். அவர்களால் விதிக்கப்பட்டு ஒருவன் செய்தால் அவர்கள் அரைகாற் பங்கு பலனையடைகின்றனர். தீர்த்தில் ஸ்நானம் செய்த புண்ணிய பலனை விற்கக்கூடாது. பெற்றோர், குரு முதலியவர்களுக்குப் புண்ணியத்தை ஸமர்ப்பிக்கலாமேயன்றி அவர்கள் அனுமதி கொடுத்தாலும் பாபத்தை ஸமர்ப்பிக்கவே கூடாது.

ஜீவனத்திற்காக அனுஷ்டிக்கப்படும் வைதிக கர்மாக்கள் பலனைத் தருகிறதில்லை. ஸரியாய்த் தெரிந்துகொள்ளாத ஸர்வ தீர்த்தங்களும் ப்ராம்ஹணனுடைய வலது பாதத்தில் வஸிக்கின்றன. ஆசாரம், ஸத்யம், பொறுமை, ஜ்ஞானங்களையுடையவனுக்கு ஒரு தீர்த்தயாத்திரையும் வேண்டியதேயில்லை. எங்கு பகவான் வஸிக்கிறானோ அதுவே புண்ணிய தீர்தமும் தபோவனமும் ப்ரம்மமுமாகும். கோதாவரி, தாம்ரபரணீ, துங்கபத்ரை, க்ருஷ்ணை, காவேரி, பாலாறு, இந்த ஆறு நதிகளும் விந்திய பர்வதத்திற்குத் தெற்கே மஹாநதிகள் என வழங்கப்படும். பர்வத்திலுண்டாகி ஸமுத்திரத்தையடைபவைகளே மஹாநதிகளாகும்.

கங்கைக்கு ஒரு காலத்திலும் ரஜோ தோஷமே கிடையாது. ஆடி பிறந்து முதல் மூன்று நாட்களுக்கு கங்கை தவிர ஸர்வ நதிகளுக்கும் ரஜோதோஷம் உண்டென்பர். ஆனால் உபாகர்மம், மரணசௌசம், க்ரஹண ஸ்நானங்களுக்கு ரஜோ தோஷத்தைக் கவனிக்கவேண்டியதில்லை. வேறு ஜலம் ஸ்நான பானங்களுக்குக் கிடைக்காவிடில் ரஜோ தோஷமுள்ளவைகளாயினும் நதியில் ஸ்நான பானங்களைச் செய்யலாமென்று விதித்தனர்.

கௌண ஸ்நானம்

தலையை நனைக்காமல் கழுத்து வரையில் அல்லது இடுப்பு வரையில் சரீரத்தை ஜலத்தில் நனைப்பதற்க்கும், ஈரவஸ்த்ரத்தால் உடம்பைத் துடைத்துக்கொள்வதற்கும் கௌண ஸ்நானம் என்று பெயர். ஈரவஸ்த்ரத்தால் துடைத்துக் கொள்வது காபில ஸ்நானம் எனப்படும்.

Koviloor Digital Library

ஸ்நானங்கள் தினப்படி ஆசரிக்க வேண்டியது ஜவிதமாகும். அவை வாருணம், ப்ராம்ஹம், ஆக்னேயம், வாயவ்யம், திவ்யம் என்பதே.

ஜலத்தில் இறங்கி, மூழ்கி, வருணஸுக்த, அகமர்ஷணாதிகளைச் சொல்லி தேவரிஷி, பித்ரு தர்ப்பணங்களைச் செய்வதே வாருணமாகும்.

ஆபோஹி என்ற ப்ரோக்ஷண மந்த்ரத்தால் பாதம், சிரஸ், மார்புகளிலும், சிரஸ், மார்பு, பாதங்களிலும், மார்பு, பாதம் சிரஸுகளிலும் முறையே ஒவ்வொறு மந்த்ரத்தால் ப்ரோக்ஷித்துக் கொள்வது மந்த்ர ஸ்நானம் அல்லது ப்ராம்ஹம்.

அக்னிஹோத்ர, அல்லது ஔபாஸனாக்னியின் பஸ்மத்தால் {திருநீறு} சரீரம் முழுவதிலும் பூசிக்கொள்வது ஆக்னேயமாம்.

பசுவின் குளம்புகளின் தூள்கள் மேலே படும்படி இருப்பது வாயவ்யமாம்.

வெயிலுடன் கூடிய மழையில் நனைவது திவ்யமாம்.

ஸ்ரீமந்நாராயணனை த்யானித்து அவரது பாதத்திலிருந்து கங்கை ப்ரவஹித்து தன் ப்ரம்மத்து தன் ப்ரம்மாந்திரத்தின் வழியாய் தேஹத்தின் உள்ளும்புறமும் பரவி சுத்தி செய்துவிட்டதாய் நினைப்பதே மானஸம் அல்லது யோகிகள் அனுஷ்டிப்பதால் யௌகிகம் என்றும் சொல்லப்படும். இதையும் சிறப்பித்து ரிஷிகள் கூறியளர்.

அதிகாரி பேதத்திற்குத் தகுந்தபடி, ஸ்நானங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. சக்தன் அசக்தனுக்கு விதித்துள்ளதைச் செய்யின் அவன்செய்யும் ஸர்வ வைதிக கர்மாக்களும் வியர்த்தமாய்விடும். ஆபத்காலத்திலும் யாவச்சக்கியம் வாருணத்தையே ஆசரிக்க முயல்வது சிறந்ததாகும்.

காயத்ரீயை பத்து தரம் அபிமந்திரித்து அஜ்ஜலத்தால் சிரஸ் முதலிய அங்கங்களைப் ப்ரோக்ஷித்துக் கொள்ளுதல் காயத்ரீ ஸ்நானமாகும். இதுவும் ஓர் மந்த்ர ஸ்நானமாகும். இக் காயத்ரீ தீர்தத்தை ப்ரணவத்தால் உட்கொண்டு இரு முறை ஆசமனமும் செய்யத்தக்கது.ஆபோஹி|ஷ்டா என்று தொடங்கி செய்யப்படும் இந்த மந்த்ர ஸ்நானமானது மலமூத்ர விஸர்ஜனங்கள் தோறும் செய்யவேண்டியதாகும்.

Koviloor Digital Library

புண்ட்ரதாரணம்

பாபியையும் ஊர்த்வபுண்ட்ரம் மேலுலகத்திற்குச் சேர்ப்பிக்கிறதால் இதற்கு ஊர்த்வபுண்ட்ரம் என்று பெயர். உபவீதம், உத்தரீயம், சிகை, புண்ட்ரம், பவித்ரம் இவைகளைத் தரித்துக் கொள்ளாமற் செய்யும் கர்மங்கள் யாவும் வீணாகின்றன. அதிலும் புண்ட்ரமின்றிச் செய்யும் யாகம், தானம், ஜபம், ஹோமம், தர்ப்பணம், அத்யயனம், போஜனம் முதலிய ஸகல கர்மங்களும் பலனற்றவை யாயும் ஆஸூரமுமாகின்றன. புண்ட்ரமுள்ளவன் மனதில் அசுத்தனா யினும், சுத்தனாயினும் புண்ட்ரம் தரித்தாலேயே புண்யசாலியாகவே விளங்குகின்றான். புண்ட்ரமுள்ளவன் மனதில் அசுத்தனாயினும், சுத்தனாயினும் புண்டரத்தைக் கண்டு கருநாகத்தைக் கண்ட தவளைபோல் யமகிங்கரர்களும் பயப்படுகிறார்கள். அதில்லாதவன் முகம் ஸ்மசான ஸத்ருசமாகி மீண்டும் நரகத்திற்கும் ஆளாகிறான்.

கோபீ சந்தனம் என்பது த்வாரகாபுரியில் உண்டானது. அதுவும் மிகவும் பாவனம் செய்யக்கூடியது. அதை தரிப்பவன் எவனெவனைப் பார்க்கிறானோ அவன் எவ்வளவு பாபியாகிலும் அவன் பாவங்கள் யாவும் துலைக்கின்றன என்று அதற்கு மஹத்துவம் உண்டு. இக்கோபீசந்தனத்தாலும் ஊர்த்வ புண்ட்ரம் தரிக்கலாம். த்ரிபுண்ட்ரமாவது த்ரிமூர்த்தி அல்லது மூவேத ஸ்வரூபமாம். இதையும் தரிக்கலாம். அவரவர்கள் பெரியோர்களின் ஆசாரப்படி ஊர்த்வ புண்ட்ரமோ, த்ரிபுண்ட்ரமோ 'கந்தத்வாராம்' என்ற ரிக்கால் குழைத்து பவித்ர விரலினால் நெற்றியிலும், மற்ற மார்பு, கைகளிலும் இட்டுக் கொள்ளவேண்டியது. எவ்வித புண்டரமுமில்லாமல் மட்டும் இருக்ககூடாது.

புண்ட்ரமே தரிக்காமல் ச்ராத்தாதிகள் செய்வதும் ஒத்துக் கொள்ளத் தகுந்த குலாசாரமாகும். ஒரு புண்ட்ரதாரி மற்றோர்வித புண்ட்ரதாரியை நேரிலோ மறைவிலோ தூஷிப்பது யமலோகத்தில் நித்திய வாஸத்தை ஆசையோடு அபேக்ஷிப்பவனாவனே தவிர வேறல்ல.

Published Printed Owned by **Sri. G.K. Seetharaman,** Published from 142, Zamrudpur, New Delhi-48, (E-mail Address:- yff@ del3.vsnl:net.in) and Printed by Alaukik Printers. 413-A/5 Govindpuri, Kalkaji, New Delhi-19. RNI Regd. No.50636/89, Delhi Posted Regd. No. DL-16028/2003 and Lincenced to post without pre-payment Regd "U" No. U (SE)-52/2003

Koviloor Digital Library

ஸுபானு வருஷத்திய ஶுப தினங்கள்

ஆனி	18.06.2003	புதன்	க்ருஷ்ண	சதுர்த்தி	திருவோணம்	6.00–70.30	மிதுனம்
	19.06.2003	வியாழன்	க்ருஷ்ண	பஞ்சமி	அவிட்டம்	7.30–9.00	கடகம்
	23.06.2003	திங்கள்	க்ருஷ்ண	நவமி	ரேவதி	6.00–7.30	மிதுனம்
	02.07.2003	புதன்	சுக்ல	திருதியை	பூசம்	6.00–7.30	கடகம்
	07.07.2003	திங்கள்	சுக்ல	அஷ்டமி	அஸ்தம்	6.00–7.30	கடகம்
	09.07,2003	புதன்	சுக்ல	தசமி	சுவாதி	4.30–6.00	மிதுனம்
	10.07.2003	வியாழன்	சுக்ல	ஏகாதசி	அனுஷம்	4.30–6.00	மிதுனம்
ஆடி	20.07.2003	ஞாயிறு	க்ருஷ்ண	ஸப்தமி	ரேவதி	6.00–7.30	கடகம்
	21.07.2003	திங்கள்	க்ருஷ்ண	அஷ்டமி	அசுவனி	6.00–7.30	கடகம்
	31.07.2003	வியாழன்	சுக்ல	துவிதியை	மகம்	9.00–10.30	கன்னி
	03.08.2003	ஞாயிறு	சுக்ல	ஷஷ்டி	அஸ்தம்	9.00–10.30	கன்னி
	04.08.2003	திங்கள்	சுக்ல	ஸப்தமி	சித்திரை	9.00.10.30	கன்னி
	07.08.2003	வியாழன்	சுக்ல	தசமி	அனுஷம்	9.00–10.30	கன்னி
	17.08.2003	ஞாயிறு	க்ருஷ்ண	பஞ்சமி	ரேவதி	7.30.–9.00	கன்னி
ஆவணி	18.08.2003	திங்கள்	க்ருஷ்ண	ஷஷ்டி	அஸ்வினி	9.00–10.30	துலாம்
	22.08.2003	வெள்ளி	க்ருஷ்ண	தசமி	மிருகசீர்ஷம்	7.30–9.00	கன்னி
	25.08.2003	திங்கள்	க்ருஷ்ண	திரயோதசி	பூசம்	9.00–10.30	துலாம்
	29.08.2003	வெள்ளி	சுக்ல	துவிதியை	உத்திரம்	7.30–9.00	கன்னி
	31.08.2003	ஞாயிறு	சுக்ல	சதுர்த்தி	சித்திரை	7.30–9.00	கன்னி